முருகப்பெருமான் துணை

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 664**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

24.07.2021, சனிக்கிழமை

1. பரமானந்த சதாசிவ சற்குருவே
பாருலகை காக்க வந்த ஞானகுருவே
அறமாக மாதவபலமாக அகிலத்தை மீட்க
அண்ணலாக வந்த ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
வரங்கள் கூடி இந்த வையகத்தில்
வல்லமைபட அரங்கன் தர்மம் பாதுகாத்துவர
3. வருகின்ற அரங்கன் தொண்டர்படை மூலம்
வையகம் நிலைத்து நிற்க உண்டான
ஆனதொரு மகா சக்திநிலை கூடிவர
அரங்கனை உலகோர் தொடர்ந்து வர
4. வகையான மாற்றம் இந்த கலியில்
வல்லமைபட ஞானமாக பரவி
பரவியே அரங்கன் தர்மம் மூலமும்
பழுதில்லாத அரங்கன் சன்மார்க்கத்தின் வழியும்
5. தரணியே பெரும் பாதுகாப்பு பெறும்
தண்டாயுதன் என் அருள்பலமும் கூடி
கூடியே அரங்கனை தொடரும் மக்களுக்கு
குறையில்லாத வாழ்வும் மேன்மையும் ஈடேறி கலியுகத்தில் பாதுகாப்பு பெருகும்
6. பெருகவே பேரானந்த கதிக்கும்
பேருலகோர் மேல்நிலை அடைந்துவர
முருகா அரங்கா எனும் ஜெபதபம்
முழுமைபட நித்தம் செய்துகொண்டு
7. செய்துகொண்டு அரங்கன் திருவடி பற்றி
சிறப்பான தர்மம் தொடர்ந்துவந்தால்
மறுப்பில்லை கலியில் அன்னவர்கட்கு
மரணமில்லாத பெருவாழ்வு உறுதியாகும்
8. ஆகவே அரங்கன் வழி ஞானத்தை
அகிலம் காக்க ஆறுமுகன் யான்
யுகமாற்றமாக செய்துகொண்டுவர
உலகோர் தொடர்ந்து ஓங்காரக்குடில் நோக்கி வருகவருக

9. வருகவே உலகோர்க்கு ஞானசித்தி
வரமென அரங்கனால் சித்திக்கக்கூடும்
முருகப்பெருமான்என் அருள்துணை கூடியும்
முழுமை ஞானம்பெற்று உயர்வார்கள்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–